டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பகுதியை ஒட்டியுள்ள ஒன்றியப் பகுதி மக்கள் அந்த ஒன்றியத்தினை ஒட்டியுள்ள வாக்குச்சாவடிகளில்தான் வாக்களிக்க முடிகின்றது. இதனால் சில இடங்களில் அப்பகுதி மக்கள் வாக்களிக்க தொலைதூரம் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, நகராட்சிப் பகுதிகளை ஒட்டியுள்ள ஒன்றியப் பகுதி மக்கள் அந்த நகராட்சிப் பகுதிகளுக்கு அருகிலேயே வாக்களிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்படையாக எந்தவொரு முடிவும் எடுக்க இயலாது. ஆனால் அங்கு வாழுகின்ற மக்களுடைய எண்ணிக்கை, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் இருக்கவேண்டிய வாக்காளர்களுடைய எண்ணிக்கை, மக்கள் நடந்து செல்ல வேண்டிய தொலைவு இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் ஆங்காங்கே வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுகின்றன. ஆகவே, இந்த வாக்குச்சாவடியிலே ஏதாவது மாற்றங்கள் செய்யவேண்டும், மக்களுக்கு சௌகரியமாகவும், வசதியாகவும் இருக்கும் பொருட்டு அண்மையிலே கொண்டுவந்து சேர்க்க வேண்டும் என்ற குறிப்புகள் இருந்தால் அது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பிரேரணையை அனுப்பி வைக்கலாம் என்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அவைகள் எல்லாம் வந்ததற்குப் பிறகு, தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பெற்று ஆணையத்தின் ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வரும். கூடுமான வரையில் மக்கள் அதிக தொலைவு நடந்து செல்லாமல் வாக்களிப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்பதைத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய யோசனையின் அடிப்படையில் அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று செயல்பட்டு வருகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியில் பரமக்குடி நகரில் *(மணியடிக்கப்பெற்றது)*.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ், நீங்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டுவிட்டீர்கள்.

வினா எண் 162, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

162--

வரதட்சணை வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் துவங்குதல்

9764*-திரு. ஓ. எஸ். அமர்நாத்:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1994 ஜனவரி 5]

(அ) வரதட்சணை சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் துவக்குவதற்குரிய செய்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

முற்பகல் 10.10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) மற்றும் (ஆ) வரதட்சணை சம்பந்தமான வழக்குக்ளை விசாரிக்க தனி நீதிமன்றம் துவக்குவதற்கு செயற்குறிப்புகள் சென்னை உயர்நீதின்றத்திலோ அல்லது அரசிடமோ இல்லை என்றாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வரதட்சணை என்ற தீய கொள்கையை அடக்கி, அதை அப்புறப்படுத்துவதற்காகத்தான் தாய்க்குலத்திற்கு இரண்டு நடவடிக்கைகள் மூலம் சிறந்த தொண்டை கடந்த 30 மாதங்களில் உருவாக்கியிருக்கிறார்கள். ஒன்று, 1961 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம் Dowry Prohibition Act என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனால் 30 ஆண்டுக்காலமாக அது தீவிரமாகச் செயல்படுத்தப்படவில்லை. எனவே, வரதட்சணை சம்பந்தமாக பெண்களுக்குப் பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பிறகு அவர்கள் இன்றைக்கு சென்னை நகரம் மற்றும் தமிழகத்தில் மற்ற மாவட்டங்களிலே உள்ள தலைநகரங்களிலே அதற்கென ஒரு போலீஸ் செல், டவுரி செல், உருவாக்கியுள்ளார்கள். For dealing with dowry harrassment and other similar problems, a dowry cell headed by an Inspector in every District has been formed. சென்னை நகரத்திலே கமிஷனர் தலைமையிலே ஒரு டவுரி செல்லும், பிற மாவட்ட தலைநகரங்களிலே ஆங்காங்கே இன்ஸ்பெக்டர் தலைமையிலே ஒரு டவுரி செல்லும் உருவாக்கி இந்தக் கொடுமைகளை ஒழிக்க நடவடிக்கை எடுத்தார்கள். அடுத்து இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு பெண்களே இருக்கின்ற காவல் நிலையங்களை உருவாக்கி, அந்தக் காவல் நிலையங்களிலே, இந்த வரதட்சணை கொடுமை வழக்குகள், குற்றங்களைத் தீவிரமாக இன்வஸ்டிகேட் செய்து பிறகு Prosecute செய்ய நடவடிக்கை எடுத்தார்கள். In addition to dowry cell in every District, an All Women Police Station has been opened for dealing with the problems relating to the women with special reference to harrassment for dowry. தமிழகத்தைப் பொறுத்தவரை 29 மகளிர் காவல் நிலையங்கள் அமைக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். அவற்றில் 10 மகளிர் காவல் நிலையங்கள் அண்மையில் கீழ்க்கண்ட இடங்களிலே துவங்கப்பெற்றன. சென்னையில்

முதன் முதலாக ஆயிரம் விளக்குத் தொகுதியில் திறக்கப்பட்டது. அடுத்து அடையாறு, கொத்தவால் சாவடி, ஆகிய இடங்களில் துவங்கப்பெற்றன. பின்னர், தருமபுரி, பர்கூர், கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களில் துவக்கப்பெற்றன. மீதமுள்ள 19 மாவட்டங்களில் நடப்பு நிதியாண்டிற்குள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துவக்கிவைக்க இருக்கிறார்கள். இந்த முயற்சியின் காரணமாக 1992, 1993 ஆகிய இரண்டு ஆண்டுகளில் இந்த வரதட்சணைக் கொடுமையினால் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. வரதட்சணை கொடுமை வழக்குகளும் குறைந்திருக்கின்றன. 1992-ஆம் ஆண்டு வரதட்சணை கொடுமையினால் உயிர் இழந்தவர்கள் 127 பேர்கள். ஆனால், 1993-ல், Dowry Cell as well as all Women Police Station—நடவடிக்கை எடுத்த பிறகு இந்த நடவடிக்கை காரணமாக--60 பேர்தான் அந்தக் கொடுமையினால் உயிர் இழக்கின்ற அளவுக்கு அது குறைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் வரதட்சணை கொடுமை வழக்குகள் 513, 1992-ஆம் ஆண்டு. இந்த ஆண்டு 1993-ல் 229 ஆக அது குறைந்திருக்கிறது. ஆக இன்றைக்கு தனி நீதிமன்றங்கள் இல்லையென்றாலும்கூட, இருக்கின்ற கிரிமினல் கோர்ட்ஸ், சிவில் கோர்ட்ஸ் மூலமாக இந்த வழக்குகளுக்கு எல்லாம் தீர்வு காணப்படுகிறது. 1961-ஆம் ஆண்டு டவுரி புரோகிபிஷன் ஆக்ட்-ஐ எஃபக்டிவ்வாக ஆக்குவதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், டவுரி செல் சென்னையிலும் பிற பகுதிகளிலும், அதுபோல் இரண்டாவது 'All Women Police Station' என்ற வகையிலே புராசிகூஷன் செய்வதற்கும், இன்வஸ்டிகேட் செய்வதற்கும் முயன்று இன்றைக்கு அந்த inbuilt arrangement செய்திருக்கின்ற காரணத்தினால் அந்தக் கொடுமை ஒழிந்திருக்கிறது. எனவே, இதற்கு தனி நீதிமன்றம் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அதிலும் குறிப்பாக பெண்கள் நலனிலும், அவர்கள் வாழ்க்கையிலும் ஒளிவிளக்காகத் திகழ்கின்ற தங்கத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையிலே பெண்களுக்கு என்று விசாரிக்க தனி காவல் நிலையங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. திருமணத்திற்கு பின்பு குடும்பத் தலைவன், தாய், தந்தை அவர்களால் வரதட்சணை கொடுமைகளாக இழைக்கின்ற கொடுமைகள் ஒன்று அல்ல இரண்டு அல்ல. சமீபத்திலே மதுரையிலே தேனியைச் சேர்ந்த ஒருவர் திருமணத்திற்குப் பின்பு . . .

1994 ஜனவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிப்பிட்ட இன்சிடென்ஸ்-ஐ எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் சரியாக இருக்காது. என்ன என்று குறிப்பிட்டுக் கேள்வியாகக் கேளுங்கள். கேள்வி நேரத்தில் ஒவ்வொரு இன்சிடென்ஸிற்கும் பதில் கொடுக்க முடியாது.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: கணவராலும், தாய், தந்தையாலும் இழைக்கப்படுகின்ற வரதட்சணை கொடுமைகளை விசாரிக்கின்ற நீதிமன்றங்கள் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களாக இருக்கின்றன. அந்தக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் எல்லாத் தரப்பு குற்றவியல் வழக்குகளும் விசாரிக்கப்படுவதால் அங்கே காலதாமதம் ஆகிறது. ஆகையால், அந்தக் குற்றவியல் நீதிமன்றங்களிலே விசாரிக்கின்ற வழக்குகளை மாவட்டத்திலுள்ள சார்பு நீதிமன்றங்களில் விசாரிக்க இந்த அரசு ஏதேனும் முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நான் ஏற்கெனவே சொன்னதுபோல் 'டவுரி செல்', இரண்டாவதாக 'விமன் போலீஸ் ஸ்டேஷன்' மூன்றாவதாக இந்தியாவிலேயே அழகிய முன்மாதிரியாக விளங்குகிற வகையில் டவுரி கொடுமையை ஒழிக்க 'ஸ்டேட் விமன் கமிஷன்' என்று உருவாக்கி இருக்கிறார்கள். அதற்குத் தலைவராக ஜஸ்டிஸ் கே. ஏ. செங்கோட்டுவேலன் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இது மாநில அளவுக்கான பிரச்சினையை கவனிக்கும். அதுபோல் மாவட்டந்தோறும் ஒரு குழு. அந்தக் குழுவில் கலெக்டர் இருக்கிறார்; எஸ். பி. இருக்கிறார்; வழக்கறிஞர் இருக்கிறார்; சோஷியல் ஒர்க்கர் இருக்கிறார். இவர்கள் எல்லாம் அமைந்த அந்தக் குழு 15 நாட்களுக்கு ஒருமுறை கூடி அந்தந்த மாவட்டங்களில் இப்படிப்பட்ட வழக்குகள் வந்தால் அதாவது ஹேரஸ்மென்ட் சம்பந்தமாகவோ அல்லது பெண் பிள்ளைகளுக்கு வரதட்சிணைக் கொடுமை என்கிற வகையிலோ விவரங்கள் வந்தாலும் அவற்றை விசாரிக்கும். அப்படி விசாரித்து வழக்கு போடுவதற்கும், அப்பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பதற்கும் மாநில அளவில் ஒரு கமிஷனும், மாவட்ட அளவில் ஒரு குழுவும் அமைத்து அவர்கள் இன்றைக்கு தீவிரமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன விவரங்களை எல்லாம் அந்தக் கமிஷன்கள் விசாரிக்கும்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் சட்டம், நீதிமன்றம் மற்றும் நிர்வாகத் தொடர்பான செலவினங்களில் ஒதுக்கப்பட்ட அந்த

செலவுப் பட்டியலில் மாவட்டத் தலைநகரிலே குடும்ப நீதிமன்றம் அமைவதாக மானியக்கோரிக்கையில் சொல்லப்பட்டிருந்தது. சென்னை மாநகரில் குடும்ப நீதிமன்றம் ஏற்கெனவே இருக்கிறது. அதுபோல் மதுரை மாநகரிலும் குடும்ப நீதிமன்றம் அமைவதாக அந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி மதுரை மாநகரில் அமைகிற குடும்ப நீதிமன்றத்திலே எந்த நேரத்திலும் வரதட்சிணைக் கொடுமை வழக்குகளை விசாரிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நீதிமன்றமும் இதுபோன்ற வழக்குகளை விசாரிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அத்துடன் திருமணம் ஆகாத திரு. அமர்நாத் போன்றவர்கள் வரதட்சிணையே வாங்குவதில்லை என்ற ஒரே குறிக்கோளிலே இருந்தாலும் இவ்வளவு தூரம் கேள்வி கேட்பதற்கு இடம் இருக்காது. அல்லது இதைப்போலவே சாமியாராகவே இருந்துவிடலாம். (சிரிப்பு) செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சிணைக் கொடுமை காரணமாக நாளுக்குநாள் பல்வேறு இடங்களில் தீக்குளிப்பு சம்பவங்கள், பெண்களைச் சித்திரவதை செய்வது போன்றவை ஏற்பட்டு வருகிற சூழ்நிலையில், திருமணம் செய்கிற காலத்திலேயே வரதட்சிணை கேட்கமாட்டோம் என்ற முறையில் ஏதேனும் ஒப்பந்தப் பத்திரம் எழுதித் தருவதற்கான முறையில் சட்டத்திருத்தம் கொண்டுவர அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்து பரிசீலிக்கப்பெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி வி. ஜி. மணிமேகலை.

திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் பெண்களுக்காக எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் 'டவுரி செல்' மூலமாக வழக்குகளை விசாரிக்க மட்டும்தான் முடியும் என்பது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியும். அந்த வழக்குகள் கிரிமினல் கோர்ட்டுக்கோ, சிவில் கோர்ட்டுக்கோ அல்லது ஃபேமிலி கோர்ட்டுக்கோ சென்றால் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தனித் தன்மையாக டவுரி பிரச்சினையை அதாவது வரதட்சிணைப்

1994 ஜனவரி 5]

பிரச்சினையை மட்டும் பார்ப்பதற்காக ஒரு வழக்குமன்றம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் நீதிமன்றங்களில் தாமதம் ஆகிறது என்று கருதித்தான் அந்தக் குறையை லேப்ஸ்–ஐப் போக்குவதற்காக அதாவது 'இன்அடிக்வசி'–யைப் போக்குவதற்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 'எக்ஸ்க்ளூசிவ்' ஆக' டவுரி அஃபன்ஸ்'–ஐ விசாரிக்க ஸ்டேட் விமன்ஸ் கமிஷன் உருவாக்கி இருக்கிறார்கள். அதன்மூலம் நிச்சயமாக இந்த வழக்கு துரிதமாக பைசல் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பத்தில் மாமியார் மருமகள் சண்டை என்றாலும் கூட வரதட்சிணைப் பிரச்சினை என்று கூறி பொய் வழக்குப் போடுகிற நிலைமையை அரசு அறியுமா? அதனால் பல நல்ல குடும்பங்கள்கூட பாதிக்கப்படுவதை அரசு அறியுமா? அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் அளித்தால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை.

திரு. அமர்நாத் வரதட்சிணையே வாங்குவதில்லை என்று சபதம் ஏற்றிருந்தால் நல்லது. அது பாராட்டுக்குரியதுதான். (குறுக்கீடு) நீங்கள் சொன்னது சரி. பழையபடி வேண்டாம். நான்தான் சொன்னேனே சபதம் ஏற்று இருந்தால் நல்லது, அல்லது இப்படியேகூட இருந்துவிடலாம் என்று.

வினா எண் 163, திரு. கே. கந்தசாமி. இருக்கையில் இல்லை.

வினா எண் 164, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 165, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை.

வினா எண் 166, திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன், இருக்கையில் இல்லை.

வினா எண் 167, திருமதி இரா. பாண்டியம்மாள். மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.